16th July 1962]

அரிசனங்களுக்கு உழவு மாடுகள் வழங்குதல்

* 308 கேள்வி—**திரு. ஆ. துரையரசன் :** கனம் விவசாயத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) அறந்தாங்கித் தாலுகாவில் அரிசனங்களுக்கு இனமாக உழவு மாடுகள் வழங்கும் மானியத்திற்காக 1958–59–ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) 1960–61–ல் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? செலவிடப் பட்ட தொகை எவ்வளவு ?

(உ) அந்தத் தொகைகளில் வித்தியாசம் உண்டு என்றால் ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) A sum of Rs. 34,200 was allotted for supply of plough bulls to Harijans in Arantangi taluk during 1958–59 and the entire amount was spent.

(இ) and (உ) As Arantangi taluk was not selected by the District Harijan Welfare Committee for implementation of the scheme in 1960–61, no amount was allotted or spent under the scheme in that year.

திரு. ஆ. துரையரசன் : கனம் சபாநாயகர் அவர்களே, அறந்தாங்கித் தொகுதி பின்தங்கிய தொகுதி என்ற காரணத்தினால் அங்கே மாடுகள் இனமாக வழங்குவதை அதிகப்படுத்தவும், மேலும் வர இருக்கிற ஆண்டு களில் அதற்கான தொகையை ஒதுக்கவும் அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது ஜில்லா அரிஜன நலக் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. இப்போது வருஷத்திற்கு இரண்டு அல்லது மூன்று தாலூகாக்கள் எடுத்துக்கொண்டு மாடுகள் கொடுக்கிறார்கள். எவ்வாறு ஒதுக்க வேண்டும் என்று அரிஜன நல ஆலோசனைக் கமிட்டி முடிவு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : அரிஜனங்களுக்கு மாடுகள் கொடுப்பதைப் போல, க்ஷவரத் தொழிலாளர்களுக்குக் கருவிகள் வாங்கிக்கொள்ள சர்க்கார் ஏதாவது மானியம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : க்ஷவரத் தொழிலாளருக்கும், சலவைத் தொழிலாளருக்கும் ஏற்கனவேயே ஜில்லாவாரியாக நிதி ஒதுக்கப்பட்டு உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : பெரியகுளம் தாலூகாவில் அரிஜனங்களுக்கு இனமாக மாடுகள் வழங்கும் மானியத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் கேள்வி அறந்தாங்கி தாலுகாவைப் பற்றியது. தனியாகக் கேள்வி கேட்டால் பெரியகுளம் தாலுகாவைப் பற்றிச் சொல்லலாம்.

மாத்தூர் அரிசனப் பள்ளி (மத்திய உணவுத் திட்டம்)

* 309 கேள்வி—**திரு. மு. கருணாநிதி :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வல்லம் யூனியன், மாத்தூர் கிராமத்தி லுள்ள அரிசனப் பள்ளியில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர்களுக்கு மதிய உணவு அளிக்கப் படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) There are 100 students (56 boys and 44 girls).